பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டதா? அதன் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து அந்த வனவிலங்கு சரணாலய கட்டணத்தை ரத்து செய்ய அரசாங்கம் முன் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கார்களிலே செல்கின்றவர்கள் ஏதோ ஒரு குறைந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு செல்வதனாலே ஒன்றும் கஷ்டம் வந்துவிடாது. ஆனால் நடந்து செல்கின்றவர்களுக்கு அப்படிப் பட்ட சங்கடங்கள் இருக்குமேயானால் அதை அரசு பரிசீலித்து தக்க முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவையாறு இசைக் கல்லூரி.

*வினா எண் 7—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு 20.85 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப் படவுள்ளது.

(ஆ) இதனால் அரசுக்கு செலவு ஏதும் இல்லை. இதற்காகும் நட்ட ஈட்டுத் தொகையான 2.41 இலட்சம் சத்திரம் நிதியிலிருந்து பெறப்படும்.

மரவள்ளிக்கிழங்கு விளையும் மாவட்டங்கள்.

*வினா எண் 8—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரவள்ளிக்கிழங்கு எந்தெந்த மாவட்டங்களில் விளைகிறது?

(ஆ) மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப் பட்டுள்ளதா?